"கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால்
அதைக் காக்கிறவன் கண்விழிப்பதுவியர்த்தம்"

# காவலன்

தந்தி: "கதலிக்பிறஸ்" யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 300.
Registered at the Ceylon G. P. O. as a Newspaper

20 - 10 - 68
வேதபோதக
ஞாயிறு

93-ம் புத். | யாழ்ப்பாணம், 1968-ம் ஞு ஐப்பசிமீ 12-ந்உ சனிக்கிழமை — பிரதி சதம் 15 | 39-ம் இல

## அறிவுப்பஞ்சம் இந்நாட்டின் ஆபத்துக்களில் ஒன்று

"அயல்நாட்டுச் செலாவணியைக் கட்டுப்படுத்துவதற்காக எமது அரசாங்கம் கையாளும் முறைகள் இந்நாட்டில் அறிவுப்பஞ்சத்தை ஏற்படுத்திவிடப்போவதுபோல் தோன்றுகின்றது. இம்முறைகளின்பயனுக புஸ்தகக் கடைகளிலும், அச்சகங்களிலும் விலைப்படும் நூல்கள், சஞ்சிகைகள், பத்திரிகைகள் விலையில் உயர்ந்துவிட்டன. அவற்றை முன்போல் பிள்ளைகளும், வளர்ந்தவர்களும் உபயோகிக்க வழியில்லாது திகைக்கின்றனர். உடம்புக்கு வேண்டிய உணவை பொதுமக்களுக்குப் பெற்றுத்தருவதில் பெரும்கவனம் செலுத்தும் அரசாங்கம் அறிவுக்கு வேண்டிய உணவில் மக்களைவாட்டுவது விந்தையாய் இருக்கின்றது. சமயநூல்களும், பத்திரிகைகளும், சஞ்சிகைகளும் மறு நூல்கள் போலவே பாதிக்கப்பட்டுள்ளன. அறிவின் பயனுகவே நாட்டில் ஒழுக்கம் ஏற்படும் என்பதை அரசாங்கம் உணர்ந்து, நல்லொழுக்க வளர்ச்சிக்குத் தடையாய் இருப்பனவற்றை நீக்கிவைக்குமாறு நாம் அரசாங்கத்திடம் கேட்டுக்கொள்ள வேண்டும். இவ்வாறு அகில இலங்கை கத்தோலிக்க இலக்கிய சங்கக்காரியதரிசியாகிய திரு. எல். வி. பெர்டினண்டஸ் அண்மையில் கூறியிருக்கின்றார்.

## அரசியல் தொடர்பு பெற்ற கல்வி ஆராய்ச்சி மன்றம் வேண்டும்

சென்றவாரம் கொழும்பு சென் ஜோசப்ஸ் கல்லூரியில் நடந்த பரிசளிப்பு விழாவில் அப்பள்ளிக்கூட அதிபர் மொன்சிஞ்ஞோர் டொன் பீற்றர் அடிகளார் இந்நாட்டில் கல்விமுறை மேலும் பழுதுபோகாது தடுப்பதற்கு ஒருயோசனை கூறியிருக்கின்றார். அவர்கூறிய யோசனை எதுவெனில், எமது நாட்டின் கல்விப் போக்கை அவதானித்துத் தக்க நடைமுறைகளை எடுத்துக்கொள்ள அரசாங்கத்துக்குப் புத்திகூற அரசியல் சார்பற்ற ஓர் ஆராய்ச்சிமன்றம் நிறுவப்பட வேண்டும்என்பதே. இம்மன்றத்தில் கல்வித்துறையில் தேறின அனுபவம் பெற்றவர்களே அங்கம் வகிக்கவேண்டும். அரசியல்வாதிகள் நாட்டின் நலனைப்பொருட்படுத்தாது நமது சொந்த முன்னேற்றத்தை முன்வைத்துத் திட்டங்கள் வகுத்ததன்பயனே நமது நாடு இன்று இருக்கும் அவலநிலைக்குக் காரணம் என்றூர் அடிகளார்.

## பீற்றர்பிள்ளை அடிகளாரின் ஞாபகத்துக்கு நீர்கொழும்பில் ஒருவாசிகர் நிலையம்

இலங்கையின் அருந்தவப் புதல்வன்எனக் கூறத்தகும் காலஞ்சென்ற பீற்றர்பிள்ளை சுவாமியார் இவ்வுலகைநீத்து 4 ஆண்டுகளாகின்றன. இவரது ஞாபகத்துக்காக நீர்கொழும்பில் ஒரு சமூக சேவை ஸ்தாபனம் இயங்குகின்றது. இதைப்பின்பற்றி நாட்டின் பல்வேறு இடங்களிலும் பலஸ்தாபனங்கள் நிறுவப்படுகின்றன, சென்ற வாரம் நீர்கொழும்பில் அவரது ஞாபகத்துக்காக வாசிகர்ஸ்தாபனம் ஒன்று நிறுவப்பட்டது. இதன் தலைவரும் உயிருமாக நீர்கொழும்புப்பகுதி நியாயதுரந்தரர்சங்கத்தலைவர் திரு. டி. சி, ஈ: வி. கருணரத்ன விளங்குவார். சுவாமியார் உயிருடன் இருக்கும்போது, நமது நாட்டில் சமூக நீதிநிலவ அவர் ஆற்றிய அருந்தொண்டுகளை அன்பர்கள் என்றும் மறவார்கள்.

## 12,000கத்தோலிக்கர் புதுநாடு பெற்றனர்

புதுநாடுசென்று குடியேற விரும்பும் கத்தோலிக்கருக்கு உதவிசெய்ய 17 வருடங்களுக்குமுன் நிறுவப்பட்ட ஒரு ஸ்தாபனத்தின் உதவியினுல் சுமார் 12,000 கத்தோலிக்கர்கள் அவுஸ்திரேலியா, கனடா, ஐக்கிய அமெரிக்கா தேசங்களில் குடியேறி நல்வாழ்வு நடத்துகின்றனர். இந்த ஸ்தாபனத்தின் பெயர் சர்வதேச கத்தோலிக்க குடியேற்ற சங்கம், ஜெனிவாநகரில் இதன் தலைமைக் காரியாலயம் உளது.

## உலக சமாதானம் நிறுவ

### பல சமயத்தலைவர் உச்சிமகாநாடா ?

உலகசமாதானத்தை நிறுவ தேசத்தலைவர்கள் பலதருணங்களில் உச்சிமகாநாடுகள் நடத்தி வந்திருக்கின்றனர். இம்முயற்சிகள் சிறு அளவிலேயே பயன் அளித்திருக்கின்றன. ஆகவே, இம்முயற்சிகளில் உலகத்தின் பல சமயத்தலைவர்களும் உச்சிமகாநாடுகூடி ஆலோசிக்க வேண்டுமென்ற அபிப்பிராயம் பலத்துவருகின்றது. சிலவாரங்களுக்குமுன் இங்கிலாந்தில் நடைபெற்ற லம்பெத் மகாநாட்டில் இந்த யோசனை உருப்பெற்றது. பரிசுத்ததந்தை 6-வது சின்னப்பரையும், பெருந்தந்தை அத்தனகோறஸ் அடிகளாரையும் பிறரையும் இதுபற்றி விசாரிக்குமாறு அங்கிளிக்கன் சபைத் தலைவர் டக்டர் ரும்சே அவர்கள் லம்பெத் மகாநாட்டு அங்கத்தவர்களால் கேட்கப்பட்டுள்ளார்.

## தென் அமெரிக்கதேச ஆயர்களின் துணிவுள்ள முடிவுகள்

பரிசுத்ததந்தை தென் அமெரிக்க கொலம்பியா தேசத்தைவிட்டு மீளவும் வத்திக்கான் சென்றபின் அப்பிரிவு மேற்றிராணிமார்கள் பாப்பரசரின் நோக்கம் பூரணமாக நிறைவேற்றப்பட வேண்டுமென்ற ஆசையுடன் வேலைசெய்து வருகின்றனர். பொருள் உள்ளவர்களுக்கும் இல்லாதவர்களுக்கும் உள்ள வித்தியாசம் அற்றுப்போக நீண்டகாலத் திட்டமொன்றை உருவாக்கியுள்ளனர். முதலாளிமார்களுக்கு எடுத்துக்காட்டாகத் திருச்சபை தன் வேலையாட்களை நடப்பித்துக்கொள்ள அப்பகுதி ஆயர்மார் திட்டமிட்டிருக்கின்றனர். திருச்சபையின் முன்மாதிரியைப் பின்பற்றி நடந்துகொள்ளத் தத்தம் பகுதிகளிலுள்ள முதலாளிமாரை மேற்றிராணிமார் விண்ணப்பித்துள்ளனர்.

## காலியில் வின்சென்ற் டிபோல் சபையினரின் 50-ம்வருடசேவை

காலிப்பிரதேசத்தில் புனித வின்சென்ற் டிபோல்சபை தொண்டாற்றத் தொடங்கி 50 வருட காலமாயிற்று. வறியவர்களுக்காக தமது நேரத்தையும் பொருளையும் உழைப்பையும் அன்புடன் செலவுசெய்த பலர் மறைந்துவிட்டனர். இக்கால எல்லையில் பல்லாயிரம்ருபாபெறுமதியான பொருட்கள் ஏழைகளுக்கு கொடுத்து உதவப்பட்டு வந்தபொழுதிலும் ஓர் உருவான திட்டம் வகுக்கப்படவில்லை. இக்குறையை நீக்கமுயற்சிகள் எடுக்கப்படுகின்றன. 50வருடநிறைவுடன் இக்குறை நீக்கப்படுமென அச்சங்ககாரியதரிசி திரு. லூயிஸ் அமரசிங்க உறுதி அளித்திருக்கின்றார்.

## தென்ஆபிரிக்க அரசாங்க நிறவெறியை சகலகிறிஸ்தவசபைகளும் வெறுக்கின்றன

கத்தோலிக்க திருச்சபை அதிகாரிகள் உட்பட தென்ஆபிரிக்காவிலுள்ள சகல கிறிஸ்தவசபைத்தலைவர்கள் அனைவரும் ஒன்றுசேர்ந்து தென்ஆபிரிக்க அரசாங்க இனக்கொள்கையைக் கண்டித்து அறிக்கை வெளிட்டிருக்கின்றனர். தென் ஆபிரிக்க அரசாங்கத்தின் நிறக்கொள்கை சுவிசேஷ போதனைகளுக்கு முற்றும்மாருனது என அதில் வெளிப்படுத்தப்பட்டிருக்கின்றது.

## மகனுக்காக தகப்பனுர் பூசை வைத்தார்

தென் வியற்னுமில் ஒரு கத்தோலிக்க இளைஞர் போரில் இறந்துவிட்டார். அவர் தகப்பனுர் "பைசான்ரியன்" பிரிவுக்குச் சேர்ந்த கத்தோலிக்க குரு. தனது மகனுரின் ஆத்தும இளைப்பாற்றிக்காக அவர் தகப்பனுராகிய அந்தக் குரு வாஷிங்டன் நகரில் கத்தோலிக்க தேவாலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுத்தார். "பைசான்ரியன்" பிரிவுக் கத்தோலிக்க குருமார் திருமணம் செய்ய அனுமதிக்கப்பட்டிருக்கின்றனரெனினும் அநேகர் திருமணம் செய்யாதவர்களே.

## பாப்பரசரின் அன்பளிப்பு

மெக்சிக்கோ தேசத்தில் இம்மாதம் 12-ம்திகதி ஆரம்பமாக இருக்கும் "ஒலிம்பிக்" விளையாட்டுக்கிராமத்தில், அவ்விளையாட்டில் பங்குபெற இருக்கும் சர்வதேச கத்தோலிக்கரின் சமயவழிபாட்டின் உதவிக்காகவும், இவ்விளையாட்டுக்களில் தமக்குள்ள மதிப்பை உலகுக்கு எடுத்துக் காட்டுவதற்காகவும் பரிசுத்ததந்தை 6-வது சின்னப்பர் ஒருவிலை உயர்ந்த "மொன்ஸ்றன்ஸ்" ஒன்றை அப்பிரதேச ஸ்தானிகர் மூலமாக அன்பளிப்புச் செய்திருக்கின்றார். அத்துடன் அந்த இடத்திலே நடைபெற இருக்கும் விசித்திரபொருட்காட்சியில் வைப்பதற்காகவும் பலஅரிய பொருட்களையும் அனுப்பியிருக்கின்றார்.

## கமக்காரன் சினிமா நட்சத்திரமானுர்

47வயது நிரம்பிய எட்வட்ஸ் ரோன்ரன் என்னும் கமக்காரன் அயர்லாந்துதேசத்து கல்வேபகுதிக்குச் சேர்ந்தவர். இவருக்கு பெயர்பெற்ற ஒரு சினிமாப்படத்தில் பங்குபெறும் வாய்ப்புக்கிடைத்திருக்கின்றது. அவர் சிலநாட்களுக்குமுன் ஒரு கடையில் சிற்றுண்டி அருந்திக்கொண்டிருக்கும்போது அக்கடையிலேயே போசனம் அருந்திக்கொண்டிருந்த சினிமாப் படத்தயாரிப்பாளர் தலைவர் அவரை அணுகி தான் விரைவில் வெளியிட இருக்கும் 'பெரிய அல்பிறெட் மன்னர்" என்னும் படத்தில் ஒரு துறவிக்கு நடிக்குமாறு கேட்டுக்கொண்டார். விபரங்களை அறிந்த எட்வட் உடனே சம்மதித்துக் கொண்டார். அவர் இன்று உலகப் பிரசித்திபெற்ற நடிகர்களுடன் சினிமா நட்சத்திரமாக விளங்குகிறூர். இவர் ஒருகமக்காரனுக வேலைசெய்யுமுன் 14வருடம் டொமினிக்கன்சபையில் ஒரு துறவியாய் இருந்திருக்கின்றூர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தினசரி பூசை வழிகாட்டி

**ஐப்பசி—1968.**

| | | | |
|---|---|---|---|
| 13 | ஞா. | பரிசுத்த ஆவிவிழாவுக்குப்பின் 19-ம்ஞாயிறு | [ப] |
| 14 | தி. | புனித கலிஸ்துஸ் | [சி] |
| 15 | செ. | புனித திரேசம்மாள் | [வெ] |
| 16 | பு. | புனித எட்வீசம்மாள் | [வெ] |
| 17 | வி. | புனிதமர்கரீத்மரியம்மாள் | [வெ] |
| 18 | வெ. | சுவிசேஷகரான புனித லூக்காஸ் | [சி] |
| 19 | ச. | புனித அல்காந்தரா இராயப்பர் | [வெ] |


# சத்தியவேத பாதுகாவலன்

1968-ம் ஆண்டு ஐப்பசி மீ 12-ந்உ


## நன்றிக்கடன்

செய்ந்நன்றி கொன்றமகற்கு உய்வில்லை என்பது வள்ளுவர் வாக்கு. மனிதன் நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறான். யாருக்கு? எல்லாவற்றுக்கும் முதல் இறைவனுக்கு. தேவனைக் கருதாது விட்டுவிட்டால் நன்றி செலுத்துவதில் அர்த்தமே இல்லாது போய்விடும். அத்தகைய நன்றி சந்தர்ப்பவாதமாக, சுயநலமாக, பேராசையாகத்தன்னும் மாறிவிடக்கூடும்.

தேவனிடமிருந்து நாம் பெற்றுக்கொண்டவற்றை ஒப்புக்கொள்ளுவதிலேயே எல்லாநன்றியும் ஆரம்பமாகின்றது. எமது உயிர்வாழ்க்கை தமக்கு அவசியமில்லாதிருந்தபோதும் எம்மைப் படைத்தார். சாதாரண பிராணிகளைப் போலல்லாது தமது சாயலாகப் படைத்தார். தம்முடன் நித்தியகால ஐக்கியத்தையும் அதை அடைவதற்குத் தேவையான வழிவகைகளையும் அளித்தார். இதைவிட எவ்வளவோ குறைவான கொடைகளே அவரது அன்பைக் காட்டப் போதியனவாயிருக்கும். இத்தகைய நன்மைகளை அவரிடமிருந்து பெற்ற நாம் பகுத்தறிவுடையவர்களாய் இருந்தால் எம் மீது சுமந்துள்ள நன்றிக்கடனை உணராமல் இருக்கமாட்டோம். இந்நன்றியை மறுப்பது இயற்கைக்கு விரோதமாகும்.

உண்மைக் கிறிஸ்தவன் தேவன் தன்னைப் படைத்தது மட்டுமல்லாமல் சகல நேரமும் தன்னைப் பராமரித்து இம்மையிலும் மறுமையிலும் அவனது விதியை நிறைவேற்றுவதில் அவனை வழி நடத்திவருகிறார் என விசுவசிக்கிறான். ஆகையால் தனது படைப்புக்கு மட்டுமல்லாமல், நாளாந்தம் தனக்கு அளிக்கப் பட்டுவரும் சிறுசிறு நன்மைகள் சகாயங்களுக்காகவும், பிறர் மூலம் தனக்கு அளிக்கப்பட்ட உதவிகளுக்காகவும் நன்றியுள்ளவனாக இருக்கிறான். தனது நாடு, அதன் தலைவர்கள், தன் அயலவர், சிநேகிதர், தனது சுகதுக்கங்கள், இன்பங்கள் சோதனைகள் யாவற்றுக்கும் நன்றிபாராட்டுகிறான்; ஏனெனில் எல்லாம் இறைவனிடமிருந்தே வருகின்றன என்றும் சில சமயங்களில் அவனது பொறுமையைச் சோதித்து அவனுக்குக் கஷ்டத்தைக் கொடுப்பினும், அவையெல்லாம் தேவனிடமிருந்து வருவதால் தனது நன்மைக்கே எனவும் அவன் உணருகின்றான்.

தேவனுக்குச் செலுத்தப்படும் நன்றியிலிருந்து பிறருக்குச் செலுத்தப்படும் நன்றி பிறக்கின்றது. வாழ்க்கைப் பாதையில் எமக்குத் துணைபுரிய இறைவன் அவர்களை அனுப்பியுள்ளார் என்பதையும, தம்மீது அவர் சுமத்திய கடமையை அவர்கள் நிறைவேற்ற மறக்கவில்லை என்பதையும் நாம் ஒப்புக்கொள்ள வேண்டும். மனித உள்ளம், எத்தகைய சுயநலம் கருதாததொன்றாய் இருந்தபோதிலும், வேண்டுமென்று நன்றி மறுக்கப்படும பொழுதும், மறக்கப்படும்பொழுதும் வருந்துகின்றது. ஆகவே, பிறரது சிறிய, பெரிய உதவிகளுக்காக வெளிப்படையாக அனபுடனும், சந்தோஷத்துடனும் நன்றி பாராட்டுவதற்கு வாய்க்கும் சந்தர்ப்பங்களைப் பயன்படுத்திக் கொள்ளல் வேண்டும்.

கிறிஸ்துநாதரே இதில் எமக்கு முன்மாதிரியாய் இருக்கிறார். அவர் தாம்பெற்ற சகாயங்களுக்காக மட்டுமன்றி, கஷ்டங்களுக்காகவும் இறைவனுக்கு நன்றி செலுத்தினார். சமயமும் பிறசிநேகமும் விதிக்கும் இந்தஉன்னத கடமையை நிறைவேற்றுவதில் அவரைப் பின்பற்றுவோமாக.

# சென்றவார அர்ச்சியசிஷ்டர்
# அர்ச், சின்னத் திரேசம்மாள்
## (ஐப்பசி 3-ந் திகதி)

(பி. சவரிமுத்து)

19ஆம் நூற்றாண்டு இறுதிப்பகுதியில் வாழ்ந்து (1873—1897) 20ஆம் நூற்றாண்டு முற்பகுதியில் அர்ச்சியசிட்டபட்டம் சூட்டப்பட்ட பெருமை (1925) அர்ச். சின்னத்தெரேசம்மாளுக்கே உரியது. "ஆறிலும்வரும் நூறிலும் வரும்; அரசனுக்கும் வரும் ஆண்டிக்கும் வரும்சாவு" என்றுபொதுவாக மக்கள்கூறுவது வழக்கம். அதுபோலவே, ஆணுக்கும்வரும், பெண்ணுக்கும் வரும, சிறுவனுக்கும் வரும் சிறுமிக்கும் வரும்; ஏழைக்கும்வரும் தனவந்தனுக்கும்வரும் அர்ச்சியசிட்டபட்டம்" என்று நாமும் கூறலாம். அர்ச்.சின்னத்தெரேசம்மாளுக்கு மரிக்கும்போது வயது 24. ஆனால் அவளின் பெயரை இப்போது அநேக சிறுமிகளுக்கும், மடங்களுக்கும், கோயில்களுக்குங்கூடக் கொடுத்திருக்கிறார்கள். எத்தகையபெருமை அவளுக்குஉண்டு.

இவ்வாறு கிறீஸ்தவர்கள் செய்கிறதற்குக் காரணமென்ன? "அவளுடைய சீரியகுணங்களும் புனிதவாழ்க்கையும்" என்று அவளை நன்கறிந்தவர்கள் கூறுவர். அவளுடைய வாழ்க்கையில் நாம் காணக்கூடிய ஓர் உண்மை உண்டு. "செய்வன திருந்தச்செய்" என்ற குறிக்கோளுக்கு இலக்காக அவள் வாழ்ந்து வந்தாளென்றே அவளுடைய வாழ்க்கை வரலாற்றில் நாம் அறியக்கூடியதாயிருக்கிறது. அவள் இதை (Little way)ச் "சிறியவழி" என்று மிகவும்தாழ்மையுடன் குறிப்பிட்டாள். தனது நாளாந்த கடமைகளை — அது மிகச்சிறியனவாய், எளியனவாயிருந்தபோதிலும் — அவற்றைத் திறம்படச் செய்து தனது பெற்றோரினதும் மடத்து முதல்வரினதும் நன்மதிப்பைப் பெற்றாளென்று நாம் வாசிக்கிறோம். இவள் இறந்து 28வருடங்களுக்குள்ளேயே—அதாவது அவளுடைய சுகபாடிகள் அநேகர் சீவந்தராயிருக்கும்போதே—அவளுக்கு அர்ச்சியசிட்டபட்டம் சூட்டப்பட்டமை ஆச்சரியத்துக்குரிய ஒரு சம்பவமன்றோ. அவளுடைய பெற்றோருக்கு ஒன்பதுபிள்ளைகள் பிறந்தபோதிலும ஐவரே வாலிபப்பருவமட்டும் வாழ்ந்தனர். இவர்கள் ஐவரும் கன்னியாஸ்திரிகளாக அழைத்தலைக் பெற்றனர்என்றால் அதுவும் வியப்புக்குரிய ஒருவிடயமன்றோ. இவர்களுள் அர்ச். சின்னத்தெரேசம்மாளே வயதிற் குறைந்தவள்எனின் அதுவும் ஓர் அதிசயமான காரியம்அன்றோ.

தாயைச் சிறுபராயத்திலேயே (அப்போது அர்ச். சின்னத்தெரேசம்மாளுக்கு வயது நாலு) இழந்த புத்திரிகள் தங்கள் தந்தையின பராமரிப்பின்கீழ் பரலோகதந்தையின் பாதத்தையே தேடிநின்றனர். தனது வாழ்க்கையின் குறிக்கோள் தனது அன்னையை இழந்தபின் முற்றும் மாறுதலடைந்ததுஎன்று அர்ச். சின்னத்தெரேசம்மாளே கூறியிருக்கிறாள்.



கார்மேல்மடத்தில் ஒருகன்னியாஸ்திரியாகச் சேர்ந்தபின், தன் கடமைகளை மிகவும் சுமுத்திரையாக அனுசரித்து வந்தாள், தனது உடல்நிலை குறைவடைந்தபோதிலும் எந்தவிதிக்கும் விலக்குவேண்டி அவள் வாழவில்லைஎன்று அவள் வரலாற்றில் தெட்டத்தெளிவாகக் கூறப்பட்டிருக்கிறது. "எல்லாம் யேசுவுக்காகவே! எல்லாம் உலகமக்களின் மனந்திரும்புதலுக்கும், இரட்சணியத்துக்குமாகவே" என்ற பேரவாவுடன் தன்கடமைகளை மிகவும் பிரமாணிக்கத்துடனும், கீழ்ப்படிவுடனும் செய்துவந்தாளென்று வாசிக்கிறோம். இவளுடைய வாழ்க்கை எங்கள் எல்லோருக்கும் விண்ணுலகத்தை அடைவதற்கு ஒருசிறியவழியைக் கற்பிக்கிறது. அதாவது அன்பின்வழி. எமது பரலோக தந்தையில் நாம் இன்பத்திலும் துன்பத்திலும் அன்புள்ளவர்களாக வாழ்ந்து வருவோமாயின் பரலோக இராச்சியம் எம்முடைய சொத்துச் சுதந்திரமாகுமெனபதே.

அவள் லிசியூ (Lisieu) என்ற நகரிலுள்ள கார்மேலமடத்தில வாழ்ந்த ஒன்பதரை வருடங்களைப்பற்றி எழுதப்பட்டிருப்பதுதான் என்ன? மேரி டி கொன்சாக்கே என்றதாயார் கூறுவது: "இவளின் ஒன்பதரைவருடமடத்து வாழ்க்கையில் மிகவும் அழகான புண்ணியங்கள் நிறைந்துவிளங்கின. தாழ்மையின்உரு, அமைச்சலின் எடுத்துக்காட்டு, பிறரன்பின் இருப்பிடம், ஞானத்தின் கண்ணாடி, துறவறத்தின் தூய்மை, ஒழுங்குகளின் உத்தமி. இவையாவும் தேவனில் அவள் கொண்டுள்ள மட்டற்ற அன்பின் வெளிஅடையாளமாக இருந்தன." அவள் இறந்த 28ஆம் ஆண்டில் புனித 11ஆம் பத்திநாத பாப்பரசர் அவளுக்கு அர்ச்சியசிட்டபட்டம் சூட்டினார். அதைத்தொடர்ந்து 1922ஆம் ஆண்டில் அவளை வேதபோதக நாடுகளின் பாதுகாவலராக அப்பாப்பரசர் முழுத்திருச்சபைக்கும் பிரகடனம்செய்தார். என்ன மகிமை சிறிய தெரேசாளுக்கு! புனித 12ஆம் பாப்பரசரும் அவளைப் பிரான்சுதேசத்தில் பாதுகாவலராகக் குறிப்பிட்டார். என்ன பெருமை அவளைத் தேடிவந்தது!

இவளுடையதிருநாளை நாம் கொண்டாடும்போது — பகிரங்கமாகவோ, மறைமுகமாகவோ —நாம் எல்லவரும் சிலசில அரியபோதனைகளை, அவளுடைய சிறுவழிகளை அறிந்துகொள்ள வேண்டும். எங்கள் இருதயங்கள் எந்நேரமும் இறையன்பு, பிறரன்பால் எரிந்துகொள்ள வேண்டும. இவளுடைய சிறியஇருதயம் எந்நேரமும் பெரிய நெருப்புப்போலவே அன்பால் எரிந்துகொண்டிருந்தது. அர்ச். இராயப்பர் தமது நிருபமொன்றில் கூறியவாறு அர்ச், சின்னத்தெரேசம்மாள் சிறப்பாக வாழ்ந்துவந்தாள். "எல்லாவற்றிற்கும் மேலாக ஒருவரோடொருவர் நிலைமையான சிநேகமுள்ளவர்களாயிருங்கள். ஏனெனில், சிநேகமானது திரளான பாவங்களை மூடும். முறுமுறுப்பில்லாமல் ஒருவரையொருவர் உபசரியுங்கள். அவனவன் பெற்றுக்கொண்ட வரத்தின்படியே சர்வேசுரனுடைய பலவித வரப்பிரசாதங்களைப் பங்கிடுகிற நல்ல உக்கிராணக்காரரைப்போல நீங்கள் ஒருவருக்கொருவர் உதவிசெய்யுங்கள். ஒருவன போதித்தால, தேவவாக்கியத்துக்கேற்கப் போதிக்கக்கடவான்; ஒருவன் பணிவிடை செய்தால் சருவேசுரன் தனக்கு அருளிய பலத்தின்படி செய்யக்கடவான். இப்படியே சகல காரியங்களிலும் எங்கள் கர்த்தராகிய யேசுக்கிறிஸ்துவின் மூலமாய்ச் சர்வேசுரனுக்குத் துதிஉண்டாகும்படி செய்வீர்களாக" (1இரா. 4: 7—11).

இதன்நிமித்தமே "யேசுவின் சிறிய புஷ்பம்" என்று திருச்சபை இவளைப் போற்றிப்புகழ்ந்து வருகிறது. எனவே சாதாரண கத்தோலிக்கராகிய நாம் இவளிடமிருந்து கற்கவேண்டிய பாடம்தான் என்ன? நாம் எந்தெந்த நிலையிலிருந்தாலும் தேவனின் மகிமைக்காகவும் யேசுவின் அன்புக்காகவும் நமது கடமைகளைச் செய்வோமாகில் நாமும் நிச்சயமாகவே அவளைப்போல விண்ணுலக பேரின்பத்தை அடையமுடியும்.

## நம் மேற்றிராணியார்

இத்தாலி, கனடா, இந்தியா ஆதியாம் தேசங்களைத் தரிசிக்கும் பொருட்டுச் சென்றமாதம் 8-ம் திகதி புறப்பட்டுச் சென்ற நம் மேற்றிராணியார் தம் அலுவல்களை முடித்துக்கொண்டு இம் மாதம் 8-ம் திகதி யாழ்ப்பாணத்துக்குத் திரும்பினார். இப்பிரயாணத்தின்போது மேற்கூறியநாடுகளில் கல்வீபயின்றுவரும் யாழ்ப்பாண மேற்றிராசனத்துக்குச் சேர்ந்த குருத்துவ மாணவர் எல்லோரையும் மற்றும் மாணவரையும் நம் மேற்றிராணியார் சந்தித்ததுகுறிப்பிடத்தக்கது.

## சிறுபிள்ளைவாத வியாதிஸ்தர்களின் லூர்துபதித் திருயாத்திரை

உலகின் பலபாகங்களிலுமிருந்து சிறுபிள்ளைவாத வியாதிஸ்தர்கள் செய்த லூர்துபதி திருயாத்திரை இருவாரங்களின்முன் நடைபெற்றது. பெரும்பாலானோர் ஐரோப்பிய கத்தோலிக்க நாடுகளிலுமிருந்து வந்தனரேனும், வடஅமெரிக்கா, தென்அமெரிக்கா, யப்பான், முதலிய இடங்களிலுமிருந்து வந்தோரும்பலர். சிறுபிள்ளைவாத வியாதிஸ்தர்கள் லூர்துபதிக்குச் செய்த யாத்திரை இது இரண்டாவதாகும். முதலாம் யாத்திரை 1963-ம்ஆண்டு செய்யப்பட்டது. வந்தவியாதிஸ்தர்களில் சிலர் "இரும்புச் சுவாசப்பை" யின் உதவியுடனேயே அங்கு காட்சி அளித்தனர் — இம்முறை நடந்த திருயாத்திரையில் 3,000 சிறுவர் பங்குபெற்றுக் கொண்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செல்வமா?.... தியாகமா?.... பாசமா?....

**அம்மா விழைந்த செல்வம்!.............**

காரியாலயத்திலிருந்து வீடு திரும்பிய ராஜு முற்றத்திலிருந்த பொம்மைக் குதிரையை விளையாட்டாகச் சீண்டி ஒருதரம் ஆடவைத்தான். அப்போதுதான் குதிரையை விட்டிறங்கி பக்கத்தே சிதறிக்கிடந்த மாபிள்களைப் பொறுக்குவதில் முனைந்திருந்த சின்ன ரவி இதைக் கண்டுவிட்டான். 'அம்மம்மா!... இங்கே பாரேன்!... மாமா என்னை குதிரையை ஆடவைக்கிறுனே!...'' என்று நாலு வீடு கேட்க ஓலமிட்டான். இத்தனைக்கும் மாமா ராஜுதான் அந்த ஆடுகுதிரையை அவனுக்கு அன்பளிப்புச் செய்திருந்தான். ஆனால் இப்போது அது ரவியின் சொந்தப் பொருளாச்சே! மாமா அதனுடன் விஷமம் பண்ணலாமா?

தன் மைந்தன் வாயிற்படியில் வருவதைக் கண்டதுமே தேநீர் சிற்றுண்டி எடுத்துவர உள்ளே சென்றிருந்தாள் மங்களா. தட்டும் கையுமாக வெளியே வந்தவள் காதில் ரவியின் முறைப்பாடு விழுந்தது. ரவிக்குப் பரிந்துபேச வந்தாள். "ஏண்டா ராஜு!... அவனுடைய குதிரையைச் சீண்டறே!... கல்யாணமாகி ஒரு குழந்தையைப் பெற்று, அதற்கு ஆடுகுதிரை வாங்கிக் கொடுக்கவேண்டிய வயதிலே அந்தப் பொம்மையுடன் சீண்டி அவனை ஏண்டா அழவைக்கிறே!...'' செல்வத்தில் கொழிக்கும் பெண் ஒருத்தியை அவள் கல்யாணம் பேசும்போதெல்லாம் தன் ஏக மைந்தன் ராஜு தட்டிக்கழிக்கிறுனே என்ற அவளது பல நாளைய தாய்மையின் தவிப்பு வார்த்தைக் குமிழிகளாக வெளியே கொட்டின. அம்மாவின் ஆத்திரத்தில் ராஜுவுக்கு உள்ளூரச் சிரிப்பு. அமைதியாக அமர்ந்து அம்மா ஆசையோடு பண்ணி வைத்த பலகாரத் தட்டைக் காலியாக்கித் தேநீரையும் அருந்தினுன். அம்மா தான் ஆரம்பித்த பிடிலையை விடுவாளா?... தொடர்ந்தாள். "ஏன் ராஜு...! வலிய வருகிற சீதேவியைக் காலாலே எட்டி உதைக்கலாமா?... ஒரு முடிவைத்தான் சொல்லேண்டா!... ஏண்டா!.. காதலோ என்னமோ எண்கிறுர்களே. அப்படி நீயும் ஏதாவது பண்ணி என் வயிற்றிலே நெருப்பைக் கொட்டவா போறே'' ...என்று நீட்டினுள்.

ராஜு தனக்கே உரித்தான அமைதியான பாணியில்கூறினுன். "அம்மா!... சிறு வயதிலிருந்தே இவள் தாண்டா உன் மனைவி என்று நீயே அடிக்கடி சொல்லுவாயே!... அந்த என் அத்தை பெண் வனஜாவை எப்படியம்மா அத்தனை எளிதில் நீ மறந்துவிட்டாய். அவள் தாயில்லாப் பிள்ளை. அப்பாவும் நொடித்து ஏழையாகப்போய்விட்டார் என்பதற்காக அவள் உனக்கேற்ற மருமகளாகாமற் போய்விடலாமா? நீங்கள் கல்யாணம் பேசும் சரோஜாவின் செல்வமா?... இல்லை!... என் மனதிற்கினியவள் வனஜாவின் பாசமா எது சிறந்தது?...என்று எடை போட்டீர்களா அம்மா?''...என்றுன். "தம்பி! அவள் ஏழை. காலமெல்லாம் கஷ்டப்பட்டுக்கொண்டேநீ வாழவேண்டுமா?'' என்ற வார்த்தையை அவள் முடிக்க அவன் இடமளிக்கவில்லை. எழுந்து வீட்டைவிட்டு வெளியே சென்ற**வன் கால்கள் ஆலயத்தை நாடின. ஜெபமாலை மரியன்னையின் பாதத்தில் மண்டியிட்டான். அவன் கைகள் ஜெபமாலை மணிகளை உருட்டின. அவன் கண்கள் கண்ணீர்த்துளிகளை உருட்டின. அவன் இதயமோ தன்னை நம்பிக் காத்திருக்கும் ஏழைப் பெண் வனஜாவுக்காக வேண்டுதல்களை உருட்டியது.**

**வனஜா செய்த தியாகம்!.................**

நாட்கள் பறந்தன. அம்மா மங்களா தன் கண்ணீர்களினுல் காரியத்தை ஓரளவு சாதித்துவிட்டாள். செல்வக்குமரி சரோஜாவுக்குத் தன் செல்வன் ராஜுவை நிச்சயார்த்தம் செய்தும் வைத்துவிட்டாள். கடைசிவரை இத்திருமணத்துக்கு இணங்க மறுத்த ராஜுவைச் சம்மதம் தெரிவிக்க வைத்த பெருமை அவன் அத்தை மகள் வனஜாவைச் சார்ந்தது. "அத்தான்!.... மாமி பேசும் திருமணத்திற்கு நீங்கள் சம்மதம் தெரிவித்து இன்பமான இல்லறத்தில் ஈடுபடவேண்டும். உத்தமமான இதயங்களில் நின்று தான் உருவாகிறதென்றுலும் அந்த இதயங்கனிந்த பாசமா?... அல்லது உங்களை உள்ளன்புடன் நேசிக்கும் உங்கள் நல் வாழ்வுக்காக நான் செய்யக்கூடிய தியாகமா?... எது சிறந்தது என்று நீங்கள் எடை போட்டீர்களா? ஜெபமாலை அன்னை அம்மாவை இழந்த எனக்கு அம்மா!... அவள் எனக்கு நல்லதே செய்வாள். உங்களுக்கு என்னில் உண்மையான அன்பிருந்தால் இந்த ஜெபமாலை மணிகளின் மேல் ஆணையாக சரோஜாவை மணந்து இன்பமாக வாழவேண்டும்'' என்று முடிவாகக் கூறிவிட்டாள். இருதலைக் கொள்ளி எறும்பின்நிலையான தவிப்புடன் நிச்சயார்த்த மோதிரத்தை சரோஜாவின் விரல்களில் இட்டான் ராஜு.

ராஜுவின் வீடோ அலங்காரத்திலும், ஆடம்பரத்திலும், ஆரவாரத்திலும் விழாக்கோலத்திலிருந்தது. அம்மா மங்களாவுக்கோ பரமதிருப்தி. "ராஜு என் செல்வனல்லவா?... என் வயிற்றில் பாலை வார்த்தான்'' என்று புகழ்ந்துகொண்டிருந்தாள். சரோஜா வீட்டுக்கு வந்துவிட்டால் தன்னைப் போல் அதிர்ஷ்டசாலி வேறு யார்?... என்பது அவள் மனக்கோட்டை. அதேவேளையில் **வனஜாவின் கால்கள் ஆலயத்தை நாடின. ஜெபமாலை மரி அன்னையின் பாதத்தில் மண்டியிட்டாள். அவள் கைகள் ஜெபமாலை மணிகளை உருட்டின. அவள் கண்கள் கண்ணீர்த் துளிகளை உருட்டின. அவள் இதயமோ அத்தான் ராஜுவின் நல் வாழ்வுக்காகத்தான் செய்யும் தியாகத்தை நன் மனதுடன் செய்ய அன்னை மரியிடம் வேண்டுதல்களை உருட்டியது.**

**மாதா இணைத்த பாசம் :**

மாதங்கள் சிலபறந்தன. ராஜு—சரோஜா திருமணத்துக்கு இன்னும் இரண்டொரு வாரங்கள்தானிருந்தன. முறத்தில் நெல்லைக்கொட்டி வீட்டுத் திண்ணையிலிருந்து புடைத்துக்கொண்டிருந்த வனஜா அப்பாவந்த சப்தம் கேட்டு நிமிர்ந்துபார்த்தாள். 'கேட்டாயா வனஜா செய்தியை!...... நன்றுக வேண்டும் அந்தப் போக்கிரிக்கும், அவன் அம்மாவுக்கும். நேற்றிரவு மின்னலும் முழக்கமுமாக இருந்ததல்லவா. உன் அத்தான் மாலையில் கோவிலுக்குப் போய்விட்டுத் திரும்பிவந்தானும் அந்தக் கொட்டும் மழையில். மின்னலொன்று திடீரென்று அவன் கண்களைத் தாக்கிவிட்டதாம். குணப்படுத்த முடியாது. காலமெல்லாம் குருடனுகவே காலங்கழிக்க வேண்டுமென்று கூறிவிட்டார்களாம் டாக்டர்கள்!...'' அப்பா விஷயத்தை முடிக்கவில்லை. அலறிவிட்டாள் வனஜா. "அப்பா!.. எதற்கும் மாமியிடம் போய்விட்டு வருகிறேன். அம்மா இறந்த நாளிலிருந்து என்னை ஆதரித்தவளாச்சே! இப்போது மனமுடைந்து போயிருப்பாள். ஆறுதல் கூறிவிட்டு வருகிறேன்'' என்று கூறியவள் மாமியின் வீட்டைநோக்கி நடையைக் கட்டினுள்.

வெளிவராந்தாவில் சாய்மான நாற்காலியொன்றில் சாய்ந்திருந்தான் ராஜு. கண்கள் திறந்துதானிருந்தன. ஆயின் பார்வைதான் போய்விட்டதே. பொங்கிவந்த அழுகையை அடக்கிக்கொண்டே உள்ளே பின்கட்டில் அழுதுகொண்டிருந்த அத்தையின் பக்கலில் போய் அமர்ந்தாள் வனஜா. வனஜாவைக்கண்ட அத்தை வனஜாவை அரவணைத்தாள். "நான் உனக்குச் செய்த துரோகம் ராஜுவின் பார்வையையே பொசுக்கிவிட்டதடி! அவன் வாழ்வே பாழாகிவிட்டதே வனஜா! என்று அரற்றினுள். "ஏனம்மா இப்படிக் கதறுகின்றீர்கள். கண்கள்போனுலென்ன?...... இரண்டு வாரங்களில் அத்தானுக்குக் கலயாணமாகிவிட்டால் அந்த அக்கா சரோஜா அத்தானைக் கவனித்துக் கவலைப்படாமல் ஆதரிப்பாளே'' என்று வஞ்சகமில்லா நெஞ்சுடன் கேட்டாள் வனஜா. "வனஜா! என்ன கூறுகிறுய். குருட்டுப்பிள்ளையை யாரடி கல்யாணஞ் செய்வார்கள்? அதுவும் சரோஜாவா! சேதியறிந்ததுமே [illegible]கணையாழியையே திருப்பி விட்டாளே! வேறெங்கோ அவளுக்குத் திருமணம் ஒழுங்கு செய்கிறுர்களாமே; ஏதோ என் செல்வத்தின் தலைவிதி இப்படிப் போய்விட்டது'' என்று கூறிக்கொண்டே கண்ணீரைக் கொட்டினுள். வனஜா இடிந்துபோய் விட்டாள். என்ன சரோஜா மறுத்துவிட்டாளாமா?... இதுதான் அவள் அத்தான்மேல் வைத்த பாசமா?... திரும்பவும தன்னையே தியாகபீடத்தில் பலியாக்க முன்வந்தாள் வனஜா. 'அத்தை! நீங்கள் விரும்பினுல் நானே அத்தானைத் திருமணஞ் செய்துகொண்டு காலமெல்லாம் அவருக்குச் சேவைசெய்கிறேனே!'' என்றுள். "வனஜா! உண்மையா! நாம் செய்த துரோகத்தைக்கூட மறந்துவிட்டாயா?'' ஆவலோடு வனஜாவை அரவணைத்தாள் மாமி மங்களா. எப்படியோ தட்டித் தடவிக்கொண்டு

(மறுபக்கம் பார்க்கவும்)



# மகளிர் மன்றம்

**மகளிர் மன்ற நேயர்கட்கு அஞ்சலி!........**

கையில் வேண்டும் ஜெபமாலை; உதட்டில் வேண்டும் ஜெபமாலை!
பையில் வேண்டும் ஜெபமாலை; "பர்ஸில்'' வேண்டும் ஜெபமாலை!

* * *

காலையிலேயோர் ஜெபமாலை: கண்ணீர்க் கடலில் ஜெபமாலை!
மாலையிலே மறு ஜெபமாலை; மகிழ்வின் மத்தியில் ஜெபமாலை!

* * *

இனிமையின் நிறைவில் ஜெபமாலை; இல்லற வாழ்விலும் ஜெபமாலை!
தனிமையின் தவிப்பில் ஜெபமாலை; துறவற வாழ்விலும் ஜெபமாலை!

* * *

வாழ்வின் இணைப்பில் ஜெபமாலை; வாழ்க்கைப் பாதையில் ஜெபமாலை!
சாவின் பிரிவில் ஜெபமாலை; சோகத்தின் எல்லையில் ஜெபமாலை!

* *

மழலைப் பேச்சில் ஜெபமாலை; இளைஞர் மூச்சில் ஜெபமாலை!
கிழவர்க்கும் ஊன்றுகோல் ஜெபமாலை; எல்லாம் எமக்கு ஜெபமாலை!

—ரோஜா

# சந்திப்போமா?........

நற்கருணை நாதரை நாம் சந்திப்போமா ?—அந்த
நாதன் பதவடிகளை நாம் வந்திப்போமா ?....
சற்பிரசாத நாதர் அன்பைச் சிந்திப்போமா ?—அவர்
சிந்தை நோகச் செய்யும்பாவம் நிந்திப்போமா ?....

ஓய்வு வேளை ஆலயத்தை நாடிடுவோமா ?—அந்த
ஒப்பற்ற தேவன் புகழ் பாடிடுவோமா ?....
மாய்கை காட்டும் உலகை விட்டு ஓடிடுவோமா ?—எங்கள்
மாபரனின் தூதர் கானம் மீட்டிடுவோமா ?....

சற்பிரசாதப் பேழையினைச் சூழ்ந்திடுவோமா ?—நாம்
சற்றுநேரம் மோனமதில் ஆழ்ந்திடுவோமா ?....
நித்தியரின் குரலொலியில் மகிழ்ந்திடுவோமா ?—நாளும்
நிர்மலமாம் தூயவழி வாழ்ந்திடுவோமா ?....

நீட்டும் யேசு கரங்களுள்ளே புகுந்திடுவோமா ?—மிக
நேயமுடன் அவர் நெஞ்சில் சாய்ந்திடுவோமா ?....
வாட்டும் துன்பம் அவரிடமே சொல்லிடுவோமா ?—என்றும்
வான்பரனின் தேறுதலை அடைந்திடுவோமா ?....

மகிபன் யேசு அன்பினிலே இன்புறுவோமா ?—உலக
மாந்தர் செய்யும் பவமெண்ணித் துன்புறுவோமா ?....
அகிலம் வியக்கும் சிலுவைக் காட்சி கண்டிடுவோமா ?—நம்
பவம் பொறுக்க அவர்கருணை வேண்டிடுவோமா ?

தேவன் காட்டும் இரக்கமதை நினைந்திடுவோமா ?—நம்மை
தேடும் தந்தை கைகளிலே அணைந்திடுவோமா ?....
பாவம் போக்கும் பரன் இதயம் இணைந்திடுவோமா ?—உயர்
பரலோக அப்பமதை வணங்கிடுவோமா ?....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடத்தல்தீவு:

## மரியாயின்சேனை ஆண்டுவிழா

விடத்தல்தீவு விசாரணைப் பங்கில் உள்ள மரியாயின்சேனையாளர் தமது சேனையின் வருடாந்த விழாவைக்கடந்த 14-9-68-ல் அதிசிறப்பாகக் கொண்டாடினார்கள். கட்டளைக்குரவர் வண. பிதா. கிறிஸ்தோஸ்தோம் அவர்களின் ஆதரவில் நிழ்ந்த இவ்விழாவை, உதவிக் கட்டளைக்குரவர் வண. பிதா. இம்மானுவேல் அவர்கள் தலைமைதாங்கி நடத்திவைத்தார்.

அன்று பிற்பகல் சேனைத்தலைவர் திரு. சி. யக்கோப்பிள்ளை அவர்கள் கூட்டஆரம்ப செபங்களை முறைப்படி தொடக்கிவைத்தார். விழாவிற்குத் திரளாகக் குழுமியிருந்த கத்தோலிக்க மக்கள் மத்தியில் வண. பிதா. இம்மானுவேல் அவர்கள் உரை நிகழ்த்துகையில் "மரியாயின் சேனையின்" மகத்துவத்தையும், கிறிஸ்தவர்கள் மரியாளின் கொடியின்கீழ் ஒன்றுசேர வேண்டிய முறைகளையும் விபரித்து விசாரணைப் பங்குகளில் சேனைகள் இயங்கவேண்டியதன் அவசியத்தை வற்புறுத்தினர்.

(அடுத்தபக்கம்)

சகோதரி

மரியாம்பிள்ளை எமலிக்கிறேஸின்

## தேகவியோகம்

"சீவியத்தில் இவரை நேசித்தவர்களே, மரணத்திலும் மறவாதிருப்பீர்களாக." மண்ணுலகை விட்டுப் பிரிந்தும் மனக்கண்ணினின்று அகலவில்லை. நல்லொழுக்கத்தில் சிறந்து, தாய்தந்தையருக்கு கீழ்ப்படிந்து, அமைச்சலில் சிறந்து விளங்கியவள். குடும்பத்தின் ஒளி சுடராய் இருந்தவள். மரியாயின்கீழ் இருவருடமாக தன்னையும், தன் வாழ்வையும் அர்ப்பணித்து மரியன்னைக்கே தன்னைத் தியாகம் செய்தவள். இவ் அடியாளது ஆன்ம இளைப்பாற்றிக்காக 19-10-68-ல் யாழ். ஆசனக்கோவிலில் துக்கப்பூசை ஒப்புக்கொடுக்கப்படும். இதைக் கண்ணுறும் குருமார், கன்னியர், சகோதர மாணவிகளை இவளின் ஆன்ம இளைப்பாற்றிக்காக வேண்டிக்கொள்ளும்படி தயவாகக் கேட்டுக்கொள்கிறோம். முடிவில்லா ஒளி இவள்மீது ஒளிர்வதாக.

இங்ஙனம், பிரிவால் துயருறும்
பெற்றோர், மரியாயின் சேனைச்சகோதரர்,
சகோதர—சகோதரிகள்,
உற்றார், உறவினர், நண்பர்.

யாழ்ப்பாணம். 162-68.

யோசேவ் கிறிஸ்ரி துரைசிங்கம்

அவர்கள் அமரத்துவம் அடைந்த

## 2-ம்வருட மரண ஞாபகம்

பிறப்பு: 29—3—1923 இறப்பு: 17—10—1966

இரக்கமுள்ள யேசுவே மரித்த யோசேவ் கிறிஸ்ரிக்கு நித்திய ஆறுதல் கொடும். முடிவில்லா ஒளி இவருக்குப் பிரகாசிக்கக்கடவதாக. சீவியத்தில் இவரை நேசித்தோம். எம்முடைய செபங்களால் கர்த்தரின் வீட்டுக்குள் இட்டுச்செல்லும்வரை இவரை நாம் கைவிடாதிருப்போமாக.

மண்ணைவிட்டு மறைந்தாலும் எம் மனக்கண்ணை விட்டு என்றுமே அகலாத என் அரிய மகனே, உம்மைக் காணும் நாள் என்றுதான் கிடைக்குமோ.

இதைக் கண்ணுறும் குருக்கள், கன்னியர்கள் சகலரும் இவருடைய ஆன்ம இளைப்பாற்றிக்காக வேண்டிக்கொள்ளுமாறு மிகவும் தயவுடன் கேட்கிறோம்.

இவரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக 17-10-68 அச்சுவேலி அர்ச். சூசையப்பர் கோயிலில் ஒரு துக்கப் பாடற்பூசை ஒப்புக்கொடுக்கப்படும்.

இவரின் பிரிவால் துயருறும்
தாய்: இராக்கினி, சகோதரர்: அன்ரன்.
யோண், சாள்ஸ், விக்ரர், அல்விறெட்,

## விற்பனைக்கு!

### திவ்விய பலி.

| | |
|---|---|
| அனுதின பலியும் அன்றாட வாழ்வும் | ... 30 |

### தியானம்.

| | ரூ. ச. |
|---|---|
| கல்வாரிகண்ட காட்சி | ...1-00 |
| வீடு நோக்கி | ...1-55 |
| மாதா வணக்கமாதம் | ...1-90 |
| ஞானஸ்நான வல்லமை | ... 30 |
| தேவ உணர்வுகள் | ... 30 |
| மன்ரேசா | ...3-25 |
| சிறு தியானங்கள் | ...5-60 |

### கிறிஸ்து மரியாய் சீவியம்

| | |
|---|---|
| நம் யேசு | ... 55 |
| வாழுமுன் வரலாறுவகுத். | ...1-00 |
| அன்னைக்கே ஜெயம் | ...1-25 |
| பாத்திமா | ... 55 |
| இளைஞர் சன்மார்க்க வாசம் | ... 40 |
| அன்பின் அழைப்பு | ...3-15 |
| நற்கருணையும், காமமும் | ...1-90 |
| ஜீவியத் திட்டம் | ... 95 |
| யேசுவின் துறவி | ...1-25 |
| கிறீஸ்துவின் வாழ்க்கை | ...2-50 |
| நல்லொழுக்கம் | ... 65 |
| நம் கடமைகள் | ...1-05 |
| சிறுவரின் யேசு | ... 60 |
| சொற்கடந்த சுந்தரி | ...2-80 |
| செபமாலைமாதா வ. மாதம் | ...1-50 |
| அவன் அமைப்பே அலாதி | ...1-00 |
| கிறிஸ்துவின் சாட்சிகள் | ...1-90 |
| இறைவனை இறைஞ்சுவோம் | ... 10 |

### இலக்கியம்

| | |
|---|---|
| தேம்பாவணி ஆராய்ச்சி | ... 95 |
| தமிழ்த்தூது (சிறியது) | ... 60 |
| தமிழகத்தில் ஒளி | ...2-20 |
| மலைப்பிரசங்கம் | ...2-50 |
| ஞா. உ. (தத்துவ போதகர்) | ...2-50 |
| ஞானஉப. " | ...3-45 |
| ஞா. உ. கு. 28 பாகங்களும் | ...2-50 |
| வணக்கம் | ...2-50 |
| தூஷண திக்காரம் | ...7-50 |
| மந்திர வியாக்கியானம் | ...2-50 |
| நம்தந்தை இராயப்பர் (2-ம் பா.) | ...2-20 |
| " (3-ம் பா.) | ...2-55 |
| நம் பரலோக தந்தை | ...1-65 |
| நித்திய சீவன சல்லாபம் (தத்துவ போதகம்) | ...1-55 |
| புனர்ஜென்ம ஆக்ஷேபம் | ...2-50 |
| வேதநாயகம் | ...1-90 |
| நீதிபதி வேதநாயகம் | 1-90 |
| பிரதாப முதலியார் சரித்திரம் | ...1-25 |

### புனிதர்கள் வரலாறு

| | |
|---|---|
| சிறுவரின் யேசு | ... 60 |
| அருளானந்தர் சரித். | ...2-25 |
| கண்கொடுத்தவள் | ... 75 |
| அவிலா தெரேசா | ...2-00 |
| மணியும், அணியும் | ...1-55 |
| அர்ச். சவேரியார் | ...2-50 |
| 23-ம் அருளப்பர் | ... 30 |
| கேரளநாட்டுக் கமலம் | ...3-10 |
| இருதய வணக்கமாதம் | ...1-90 |
| அர்ச். சூசையப்பர் வணக். மா | ... 65 |
| என் தோழன் | ... 60 |

* * *

கத்தோலிக்க திருமறை விளக்கம்:

| | |
|---|---|
| 1ஆம் பாகம் | ... 75 |
| 2ஆம் பாகம் | ...1-50 |
| 3ஆம், 4ஆம் பாகங்கள் | ...1-50 |

வாழ்வும், வழியும்

| | |
|---|---|
| 1ஆம் பாகம் | ... 75 |
| 2ஆம் பாகம் | ... 75 |

அர்ச்சியசிஷ்டர்களின் சரித்திரம்

| | |
|---|---|
| 1-ம்பாகம் | ...4-00 |
| ,, 2ஆம் பாகம் | ...3-00 |
| ,, 3ஆம் பாகம் | ...4-00 |
| ,, 4ஆம் பாகம் | ...4-00 |
| லூக்காஸ் சுவிசேஷம் | ... 75 |
| மத்தேயு ,, | ... 70 |
| அருளப்பர் ,, | ... 65 |

திருமதி வெரோணிக்கம்மா யோண் ராஜா

அவர்கள்

இறைவனடி சேர்ந்த

## 2-ம் வருட ஞாபகம்

மறைவு: 15-10-66

"நித்திய இளைப்பாற்றியை இவவுக்குக் கொடுத்தருளும் சுவாமி!
முடிவில்லாத ஒளி பிரகாசிக்கக்கடவது!
சமாதானத்தில் இளைப்பாறுவாராக."

இவவின் ஆத்தும இளைப்பாற்றிக்காக நிகழும் ஐப்பசிமாதம் 16-ந்திகதி புதன் கிழமை காலை 6 மணிக்கு அச்சுவேலி புனித திரேசம்மாள் கன்னியர் மடத்தில் ஒரு துக்கப் பாடற்பூசை ஒப்புக்கொடுக்கப்படும். இதைக் கண்ணுறும் வண. குருமார், சங். சந்நியாசிகள், கன்னியர், மற்றும் இனசனர், சிநேகிதர் யாவரும் இவ்வாத்துமஇளைப்பாற்றிக்காகப் பிரார்த்திக்கும்படி பணிவாகக் கேட்டுக்கொள்ளுகிறோம்.

பிள்ளைகள்:

பயஸ் காராளசிங்கம், விக்ரர் ஜெயவீரசிங்கம், திருமதி யோசேப்பின் யோசவ், அகஸ்ரின் இராசா, வண. பிதா லீயோ துரைசிங்கம், ஓ. எம். ஐ., திருமதி றெஜினு சவரிமுத்து.

"காராளகிரி",
அச்சுவேலி. 161-68.

பீலிக்ஷ் மரியான் தனிஸ்லாஸ்

அவர்கள்

அமரத்துவமடைந்த

## 1-ம் வருட ஞாபகம்

தோற்றம்: 21—5—1934 மறைவு: 2—11—1967.

மண்ணில் மறைந்தாலும், எம் மனக்கண்ணில் நின்று என்றுமே நீங்காத எங்களது அருமைக் குமாரனும், அன்புச் சகோதரனுமானவர் இறைவனடிசேர்ந்து ஒருவருடம் பூர்த்தியாகின்றது. இதனைக் கண்ணுறும் சகலரும் அவரது ஆன்ம சாந்திக்காக இறைவனை வேண்டுமாறு தயவாகக் கேட்டுக்கொள்ளுகிறோம்.

துயருறும்:
பெற்றோர்களும்,
சகோதர—சகோதரிகளும்.

மீக்கனுவ,
அம்பிற்றிய. 161-68

**விற்பனைக்கு:**

திருப்பலி பூசையின்போது
தினசரி உபயோகிக்கும்

## பூசைச் செபங்கள்

எனும் புத்தகம் பூசைப் பாடல்களையும் உள்ளடக்கியதாய்ப் புதிதாக வெளிவந்துள்ளது.

தேவையானோர் கீழ்வரும் முகவரியில் பெற்றுக் கொள்ளலாம்.

அதிபர்,
அர்ச். சூசைமாமுனிவர் புத்தகசாலை,
யாழ்ப்பாணம்.

| | |
|---|---|
| குடும்ப செபமாலை (பொக்ஷம்) | ...3-65 |
| 2-ம் வத்திக்கான் மஞ்சரி | ...4-10 |
| Vatican Digest | ...4-10 |

கிடைக்குமிடம்:
அர்ச். சூசைமாமுனிவர் புத்தகசாலை,
பிரதானவீதி, யாழ்ப்பாணம். 158/68.

மேரியோசவ் இராசதுரை

அவர்கள் மறைவின்

## முதல் வருட நினைவு

"ஆண்டவரில் மரிக்கிறவர்கள் பாக்கியவான்கள்."

தோற்றம்: 30—8—1899. மறைவு: 13—10—1967.

"சீவியத்தில் நேசித்தோம்
மரணத்தில் மறக்கமாட்டோம்."

இரக்கம் மிகுந்த யேசுவே! இன்னல்கள் மிகுந்த இவ்வுலகைவிட்டுப் பிரிந்துபோன எனதருமைப் பத்தாவும், எங்கள் அரிய தந்தையருமான மேரி யோசவ் இராசதுரையின் ஆத்துமத்துக்கு இளைப்பாற்றியையும் முடிவில்லாத பிரகாசத்தையும் கட்டளையிட்டருளும்.

இதைக் கண்ணுறும் வண. குருமாரும், சங். கன்னியரும், விசுவாசிகளும் இவ்வாத்தும இளைப்பாற்றிக்காக வேண்டிக் கொள்ளும்படி தாழ்மையுடன் கேட்டுக் கொள்ளுகிறோம்.

பிரிவால் துயருறும்,
மனைவி, மக்கள்,
மருகர், பேரர்.

உதயதிசை,
ஊர்காவற்றுறை.
160-68

### நன்றியறிந்த ஸ்தோத்திரம்

சதாசகாயமாதாவின் விசேட வரப்பிரசாதத்தினால் நெடுநாள் வருத்தம் கண்டு பிடிக்கப்பட்டு சுகம் கிடைத்தற்கு நன்றித்துதியாகவும், நேர்த்தியின்படியும் பிரசுரிக்கின்றேன்.

எம். எவ். எவ்.
159/68.

## செல்வமா?....

அங்கேவந்த ராஜு கேட்டுவிட்டான் இந்தச் சம்பாஷணையை. "அம்மா! ஏழைப்பெண் ஒருத்தியின்வாழ்வை அன்று சிதறடித்தீர்கள். திரும்பவும் குருடனுக்கு மனைவியாக்கி சிதறடிக்காதீர்கள்" என்றான் ஆத்திரம் பொங்கிய குரலில். "அத்தான்! செபமாலை அன்னையின்பேரால் உங்களைக் கேட்கிறேன், உங்களுக்குச் சேவைசெய்யும் இன்பத்தை எனக்களியுங்கள்" என்று அவன் கால்களில் விழுந்தாள் வனஜா.

ராஜு—வனஜா திருமணம் அமைதியான மனநிறைவுடன் நடைபெற்றது. ஆண்டொன்று பறந்தது. அழகுச்சிறுவன் பாஸ்கர் அவர்கள் இல்லறவாழ்வில் மலர்ந்தான். அன்று ஐப்பசி 7-ந்தேதி. மின்னல், புயல், இடி, பலத்த மழையுங்கூட. அம்மா மங்களாவின் மடியில் பாஸ்கரை உறங்கவிட்டுவிட்டு நாளாந்தம் ஆலயஞ்செல்லும் ராஜுவும், வனஜாவும் செபமாலையும் கையுமாக மழையையும் ஊடுருவிச் சென்றனர். வனஜாவின் கைத்தாங்கலில் சென்றுகொண்டிருந்தான் ராஜு. திடீரென்று ஒரு மின்னல். ஆலயத்தின் வராந்தாவில் அப்படியே சாய்ந்துவிட்டான் ராஜு. திகைத்துப்போய்நின்ற வனஜாவை "வனஜா!... வனஜா! இதோபார் என்கண்கள் நன்றாகத் தெரிகின்றனவே!..." என்று ராஜு எழுப்பிய அதிசயக்குரல் மீண்டும் இவ்வுலகுக்கு அழைத்துவந்தது. ஆம்! மின்னலின் தாக்குதல் பறித்தபார்வை திரும்பவும் அம்மின்னலின் தாக்குதலில்... ஏன்? செபமாலை அன்னையின் கருணையில் அவனுக்குக் கிடைத்துவிட்டது. அக்களிப்புடன் ராஜுவும் வனஜாவும் ஆலயத்துள் நுழைந்தனர். **செபமாலை மரியன்னையின் பாதத்தில் மண்டியிட்டனர். அவர்கள் கைகள் செபமாலை மணிகளை உருட்டின. அவர்கள் கண்கள் ஆனந்தக் கண்ணீரை உருட்டின. அவர்கள் இதயங்களோ தம்மை இணைத்துவைத்து, இன்பமளித்து, பார்வையுமீந்த அன்னைக்கு நன்றித் துதிகளை உருட்டின.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தண்டமிழ்த் தொண்டர் தைரியநாதர்

வண. பிதா வே. அன்ரனி ஜோண்

### தோற்றம்

"கம்பனைப்போல், வள்ளுவர்போல், இளங்கோபோல் பூமிதனில் யாங்கணும் பிறந்ததில்லை; உண்மை வெறும் புகழ்ச்சியில்லை" என்ற பாரதியாரின் வாக்கை பொய்ப்பிக்கவோ என்னவோ 1680-ம் ஆண்டு கார்த்திகைத் திங்கள் 18-ம் நாள் இத்தாலி தேசத்தின் வெனிஸ் மாகாணத்தைச்சேர்ந்த மகா கவி வெர்ஜிலின் பிறப்பிடத்திற்கு அண்மையிலேயுள்ள, கஸ்டிகிலியோன் என்னும் பட்டணத்திலே உதித்தார் கான்ஸ்டன்சியஸ் பெஸ்கி. "கான்ஸ்டன்ஸ்" என்னும் சொல் லத்தின் பதமாகிய "Constantin" என்னும் சொல்லிலிருந்து பிறந்துள்ளது. இதன் கருத்தை வீரம், தைரியம், வன்மை, உறுதிஎன்று மொழிபெயர்ப்பர். இதை யிட்டுத்தான் சான்றோரும் அறிஞர்களும் இவரைத் "தைரியநாதர்" என்றும் "வீரமாமுனிவர்" என்றும் அழைப்பர்.

### இந்தியாவுக்கு வருகை

கிறிஸ்துமறையைப் பறைசாற்ற 1711-ம் ஆண்டு அடிகளார் பாரதநாட்டுக்குவந்தார். நெல்லுக்கு இறைத்த நீர் புல்லுக்கும் ஆனதுபோல் முனிவரின் கிறிஸ்தவ நற்பணி தமிழையும் தலைதூக்கிவிட்டது. வீரமாமுனிவரின் சமயத்தொண்டு தமிழ்த்தொண்டிற்கு உதவியதுபோல், அவர் தமிழ்த் தொண்டு சமயத்தொண்டிற்கு உதவியாயிற்று. சுவாமிகள் என்று தமிழ் நாட்டில் காலைவைத்தாரோ அன்றே தமிழ் அன்னையைக்கண்டு, அவளது செல்வாக்கிலே, செழிப்பிலே மயங்கித் தமிழைப் போற்றினர். இனிய கடவுளை இன்பத்தமிழிலே போற்ற நினைத்து, தமிழ்ப்புலவர்களைத்தேடி, தமிழைப்பயின்று, அவர்களே வியக்கும் வண்ணம் திறமையும் பாண்டித்தியமும் பெற்றார். கம்பனையும், வள்ளுவரையும் அவர்களின் பாக்களிலேகண்டு ஆனந்தக்கண்ணீர் வடித்தார். செம்மையும் தொன்மையும் வாய்ந்த தமிழ் அன்னையைச் சிறப்பித்தவர்கள் பலர். அதிலே ஒளிவிளக்காய், மணி விளக்காய் விழுமிய தொண்டுகள் புரிந்தவருள் வீரமாமுனிவரும் ஒருவர். தமிழனுக்குத் தமிழ்மீது ஆர்வம் உண்டென்றால் அது வியக்கத்தக்ககாரியமன்று; அது இயல்பாகும். இலக்கண இலக்கியங்களை கற்றுப் பிறமொழிகளில் பெரும் புலமை அடைவது அரிதாகும். மேலும் ஒரு பிறநாட்டான், ஓர் ஐரோப்பியன் தமிழில் தமிழ்ப்புலவர்களும் புரவலர்களும் வியக்கும்வண்ணம் உயர்ந்த செய்யுள்களையும் இலக்கண நூல்களையும் இயற்றினல் அவனை என் வாழ்க்கையும் நிகரிலாப் புலமையும் பெற்று ஒப்பாரும் மிக்காரும் இல்லாது விளங்கிய வீரமாமுனிவரைத் னென்று புகழ்வது.

### அடிகளின் பெருமை

தமிழ் இலக்கிய இலக்கணங்களை ஓதுவாரும் மொழிநூல் ஆராய்வாரும் இவரை நினைந்து போற்றாமலிருக்கமுடியாது. "வீரமாமுனிவருக்குமுன் தமிழ்மொழியில் எ, ஒ, என்ற எழுத்துக்கள் உரு வேறுபாடு இன்றி நெடிலாகவும் குறிலாகவும் வழங்கப்பட்டு வந்தன. இவ்வேறுபாட்டின்மை படிப்போருக்குப் பெரும் மயக்கத்தை அளித்ததால் குறிலையும் நெடிலையும் நன்கு தெளிந்துகொள்ள இவற்றின் உருவங்களை பெஸ்கி மாற்றியமைத்தார்." எம் தாய்மொழியில் வடமொழி ஒலிபோன்ற சில ஒலிகள் இல்லையென



ஏசலுற்றூர்க்குப் பதிலாக ஒலிகள் அமைந்துள்ளன என்பதை அடிகளே முதன் முதலில குறித்துள்ளார். சில எழுத்துக்கள் சில சந்தர்ப்பத்தில் வெவ்வேறு விதமாக ஒலிக்கப்படும் ஒலிநுட்பத்தை "கொடுந்தமிழ்" என்னும் நூலில் விரிவாக வரைந்துள்ளார்.

### வசன நூல்கள்

தமிழ்மக்கள் போதிய புலமையும் மொழிப்பற்றுமின்றி வாழ்ந்தமைக்கு அடிப்படைக் காரணத்தை அடிகள் அலசலானர். பிறமொழிகளில் வசன நூல்கள் மலிந்து கிடப்பதைப்போன்று தமிழ்மொழியில் இல்லாத குறையே காரணம் என அறிந்தார். பாமரமக்களுக்கும் படித்தவர்களுக்கும் இலக்கிய வாயிலாக அறிவை ஊட்டுவது கடினம்; வசனநூல்கள் வாயிலாக அறிவைப் புகட்டுவது எளிது என்பதை உணர்ந்தார் அடிகள். முனிவர் பல வசனநூல்களை இயற்றினர். "பரமார்த்தகுரு கதை". வேதத்தைப்புகட்டும் உபதேசிமாருக்கு ஞானத்தைப்புகட்டும் பொருட்டு "வேதியர் ஒழுக்கம்" என்னும் அரியநூலை ஆக்கினர்.

### சதுர் அகராதி

வீரமாமுனிவரே தமிழ் அகராதியின் தந்தை. சதுரகராதி, பெயர், பொருள், தொகை, தொடை என்னும் நான்கு அதிகாரங்களைத் தன்னுள் கொண்டது. தமிழ் வளர்த்த தந்தையாகிய வீரமாமுனிவர் தொகுத்த சதுரகராதியே தற்கால அகராதிகளுக்குத் தாயாக இலங்குகிறது.

### ஏனைய நூல்கள்

சென்ற ஐந்நூறு ஆண்டுகளில் தமிழ் மொழியில் எழுந்த சிறந்த செய்யுள்

[தொடர்ச்சி 6ஆம் பக்கம்]

## விழா எடுப்போம்!

எழில்மிகு இத்தாலி நாட்டின்
ஈர்க்கின்ற கவர்ச்சி யிலிருந்து
ஒளித் தோடி வந்தமுனி;
உயர் துறவு மேற்கொண்டோன்,
பொழில்கள் பல சூழ்ந்து வளம்
பொழிகின்ற தமிழகத்தார்
மொழி தனிலே மயங்கி, தனை
முற்றாக மறந்த தென்னே!

கற்பனைத் தேனூறும் கவிதை மலர்களை
கன்னித் தமிழ் மகளின் கழுத்திலே
அற்புத மாலையாக்கி அணிந்திங்கு
அழியாத புகழினைத் தேடிக்கொண்டோன்,
அற்பமும் மாசுஇலா அமலன் கதையினை
அவனியோர் அறியும்படி இசைத்து
நற்பயன் தனையும் வானகத்தில்
நன்றாகச சேமித்து வைத்துக்கொண்டோன்!

தமிழுக்குப்பணி செய்த மேற்கவரில்
தலைசிறந்து நிற்கும் இவ்வறிஞனைத்
தமிழர்நாம் போற்றாது விடுவது
தமிழ்த் தாய்க்குச் செய்யும் துரோகமே!
அமிழ்தாகும் அவனது நூல்கள்
அத்தனையும் அழியாது நாமும்
இமை விழியைக் காப்பது போல
என்றென்றும் காத்து நிற்போமே!

இத்தாலி நாட்டவன் என்று மக்கள்
எண்ணாத வகையினில் இறுதிவரை
முத்தமிழ் நாட்டோரில் ஒருவனாய்
முற்றாகத் தமை மாற்றிக்கொண்டு
எத்தனையோ நல்லபணி செய்து
எம்தமிழர் நெஞ்சினில் நிறைந்த
வித்தகன் வீரமா முனிவனுக்கு
விழா வெடுத்து மகிழ்வுறு வோமே!

— எழுதியது: எஸ். அரியரெத்தினம்

## மட்டக்களப்பில் வீரமாமுனிவர் விழா

# என் இந்த விழா?

குறிப்பிடத்தக்க ஒருசில வெளிநாட்டு அறிஞர்களின் தமிழ்ப்பற்றையும், தமிழ் அறிவையும், தமிழைத்தாய் மொழியாகக் கொண்ட தமிழ்மகன் ஒருவனின் தமிழ் அறிவோடும், தமிழ்ப் பற்றோடும் ஒப்பு நோக்கி ஆராயும் போது, முனைவர்கள் நமது அன்னை மொழிக்கு அந்நியவர்களாகத் தோன்றவில்லை. இப்படிப்பட்ட வெளிநாட்டு அறிஞர்களில் ஒருவர்தான் பெஸ்கி எனும இயற்பெயர் கொண்ட வீரமாமுனிவர். தமிழையும் தம்மையும் பிரிக்கமுடியாத அளவுக்கு தமிழ்த் தொண்டு செய்த பெரியார் இவர். கம்பராமாயணத்திற்கு நிகரான ஒரு காவியமான தேம்பாவணியையும், இன்னும் எத்தனையோ செய்யுள், வசனநடை நூல்களையும் தமிழ்உலகிற்கு அளித்த இப்பெரும் அறிஞரை ஈழத்தமிழ் உலகம் முற்றாக மறந்ததேனென்று தெரியவில்லை.

எனவேதான் அண்மையில் ஆரம்பிக்கப்பட்ட எங்களது மட்டக்களப்பு வீரமாமுனிவர் முத்தமிழ் மன்றம், இப்பெருமகனாரை நினைவுகூரும்வண்ணம் இலங்கையிலேயே முதன்முறையாக இந்தவிழாவை எடுக்க முன்வந்திருக்கிறது. ஈழத்தமிழர்கள் மறந்துவிட்ட இந்த இத்தாலியநாட்டு இன் தமிழ் அறிஞனை அவர்கள் முன் கொண்டுவந்து நிறுத்துவதே இவ்விழாவின் நோக்கமாகும்.

தாய்த்தமிழகத்தில் ஆண்டுதோறும் விமரிசையான முறையில் விழாவெடுத்து மகிமைப்படுத்தும் வீரமாமுனிவனை சேய்த்தமிழகத்தார் இன்னும் மறந்துகிடப்பது நன்றி கொன்றசெயல் மட்டுமன்றி, நம்தமிழ்த்தாய்க்குச் செய்யும்மிகப்பெரிய துரோகமுமாகும். ஆகவே, மட்டக்களப்பில் இம்மாதம் 12-ம்நாளில் எங்கள் மன்றம் எடுக்கும் இச்சிறு விழாவைத் தொடர்ந்து இலங்கையில் தமிழர் வாழும் ஒவ்வொரு பகுதியிலும் மாபெரும் விழாக்கள் எடுக்கப்படுமென்று நம்புகிறேன்.

எஸ். அரியரெத்தினம்
தலைவர்,
மட்டக்களப்பு வீரமாமுனிவர்
முத்தமிழ் மன்றம்.

## மரியாயின் சேனை...

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

மேலும் அவர் தொடர்ந்து பேசுகையில் "இல்லற அப்போஸ்தொலிக்க தொண்டின் அவசியம்பற்றி பரிசுத்த தந்தை பாப்பரசர் வலியுறுத்தியிருப்பதைச் சுட்டிக்காட்டி மரியாயின் சேனையும் அப்போஸ்தொலிக்க தொண்டுக்கு எம்மை வழிநடத்தும் சிறந்த இயக்கம் எனவும், இப்படையில் கிறிஸ்தவர்கள் அதிகமாக அங்கம் வகிக்க முன்வர வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்.

தொடர்ந்து மரியாயின் சேனைத்தலைவரும, தலைமைஆசிரியர் திரு. ஏ. ஜாப அவர்களும மரியாளையும், சேனையையும், சேனைஊழியர்களையும் தொடர்புறுத்தி சொற்பெருக்காற்றினர். சேனைச் செயலாளர் ஆசிரியர் திரு. ப. பெனடிக்ற் அவர்களும், பொருளாளர் திரு. வ. சுவக்கின்அவர்களும் சேனையின் வருடாந்தவேலை, கணக்கு அறிக்கைகளை வாசித்தார்கள்.

விழாவைச் சிறப்பிக்குமுகமாக ஆசிரியர் திரு. அ அந்தோனிமுத்து அவர்கள் தலைமையில் "தாயே உன் பாதம்தஞ்சம்" என்ற நாடகத்தை வாலிபர்கள் திறம்பட நடித்துக்காட்டினார்கள்.

பின்னர் உபதலைவர் திரு. அ. மத்தேஸ்அவர்களால் நன்றியுரை கூறப்பட்டபோது, மரியாயின் சேனையை விடத்தல்தீவில் உருவாக்க உழைத்த வண. பிதா. கிறிஸ்தோஸ்தோம்அவர்களையும், சேனையின் வளர்ச்சிக்காக என்றும் ஆக்கமும், ஊக்கமும் தந்து வருகின்ற பிதா. இம்மானுவேல்அவர்களையும் பாராட்டி, விழாவைத்திறம்படநடத்த உதவியளித்த சகலருக்கும் சேனையின்சார்பில் நன்றிதெரிவித்து நின்றார்.

ஈற்றில், ஞானத்தலைவரின் ஆசீர்வாதத்துடன்விழா இனிதே முடிவுற்றது.

—நிருபர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுதேச வர்த்தமானம்

## மாநகரசபைத் தேர்தல்

யாழ்ப்பாண மாநகரசபைத் தேர்தலுக்கான நியமனப்பத்திரங்களை அபேட்சகர்கள் சமர்ப்பிக்கும்தினம் வருகிறகார்த்திகைமாதம் 2ஆம்திகதியெனத் தெரியவருகிறது. தேர்தல் வருகிறமார்கழிமாத இறுதிவாரத்தில்தான் நடைபெறும்போல் இருக்கிறது.

## சமையலுக்குச் சிங்களம்

சகல அரசாங்க பாடசாலைகளினதும், விடுதிச்சாலைகளில் கடமைபார்க்கும் சமையல் வேலையாட்களும் உத்தியோகமொழியில் சித்திபெறவேண்டுமென்று கல்விப்பகுதி சுற்றுநிருபம் ஒன்று விடுத்திருக்கிறது. அதனால் சமையல் வேலையாட்களின் குழுவொன்று உபசபாநாயகரைச்சந்தித்து முறையீடுசெய்திருக்கிறது

## காரணம் கூறுகின்றார்

"அரசியல்வாதிகளின் தலையீட்டாலே இந்நாட்டில் கல்வியின்தரம் மோசமானநிலையைநோக்கிச் சென்றுகொண்டிருக்கிறது; இன்றுள்ள மந்திரிகளும், எம். பி.களும் ஆசிரியர்களைத் தங்கள் உபகரணங்களாகப் பிரயோகிக்கிறார்கள்; இது கண்டிக்கப்பட வேண்டியதுடன் தவிர்க்கப்படவும் வேண்டும்" என்று கல்விநூற்றாண்டு சம்பந்தமாய்க் காலியில்நடைபெற்ற ஒருகூட்டத்திலே பௌத்தகாங்கிரஸ்தலைவர் திரு. எச். டபிள்யு. அமாசூரிய பேசியிருக்கின்றார்.

## புதிய பொலிஸ் நிலையம்

நெடுந்தீவுக்கெனத் தனிப்பொலிஸ் நிலையம்ஒன்று வருகிற கார்த்திகை மாதம் .ஆம்திகதியன்று திறக்கப்படவிருக்கிறது. ஊர்காவற்றுறைப் பொலிஸ்நிலையத்திலிருந்து நெடுந்தீவு அதிகம்தூரத்தில் இருப்பதாலேயே இந்தநடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. ஒருசார்ஜனின் தலைமையிலே ஆறுபொலிசார் அங்குசெல்வார்கள்.

## தேயிலையில் முதலிடம்

முந்திய இருஆண்டுகளிலும்போலச் சென்ற1967ஆம்ஆண்டிலும் உலகில் தேயிலை ஏற்றுமதிசெய்யும் நாடுகளில் இலங்கைமூன்றும்முறையாக முதலிடம் வகித்திருக்கிறது. சென்றஆண்டு இலங்கையிலிருந்து மொத்தமாக 47 கோடியே 73லட்சத்து 83ஆயிரம்றாத்தல்தேயிலை ஏற்றுமதிசெய்யப்பட்டது. இந்தியா சென்றஆண்டில் ஏற்றுமதிசெய்ததேயிலை 47கோடியே 10லட்சத்து 75ஆயிரம்றாத்தலாகும். இலங்கையிலிருந்து அதிகம்கூடியதேயிலை வாங்கியது பிரித்தானியே.

## கலை, விஞ்ஞானக்கல்வி

இலங்கையில் பி. ஏ. முதலாம் கலைப்பட்ட தாரிகளாய் 5,000பேர்வரை பிழைப்பின்றித் தவிப்பதாலே கொழும்பிலும், மற்றுமிடங்களிலுமுள்ளபெரிய கலலூரிகளில் அதிகமானவர்கள் விஞ்ஞானக்கலையில் இறங்கிவருகிறார்கள். இது கடந்தஇருவருடங்களாகநிகழ்ந்துவரும் சம்பவமாகும். அதனால் இப்பெரியகல்லூரிகள் விஞ்ஞானப்பயிற்சிச்சாலைகளை விஸ்தரிப்பதிலும், அவற்றிலே புதியஉபகரணங்கள் அமைப்பதிலும் கருத்தாயிருந்துவருகின்றன.

## மாசியும் மல்லியும்

இதுவரை கூப்பன்ஒன்றுக்கு ஒரு அவுண்ஸ்வீதம் கொடுபட்டுவந்த மாசி, நான்கு அவுன்ஸ்வீதமும், நான்கு அவுன்ஸ்வீதம் கொடுபட்டுவந்த மல்லி எட்டுஅவுன்ஸ்வீதமும் சென்ற 3ஆம் திகதி வியாழக்கிழமைமுதல் முறையே 2அவுண்ஸ், 8அவுண்ஸ்வீதம் கொடுபட்டு வருகின்றன.

## அவசரகால நாட்கள்

இலங்கையிலே தற்போது இருந்துவரும் அவசரகாலச்சட்டம் நடைமுறைக்குவந்து சென்ற 4ஆம்திகதி வெள்ளிக்கிழமையோடு1,000நாட்கள் பூர்த்தியடைந்துள்ளன. அதிககாலம் அவசரகாலச்சட்டம் நடைமுறையில் இருந்திருப்பது இலங்கையில் இதுவே முதன்முறையாகும்.

## செங்கொடியும் முஸ்லிம்களும்

செங்கொடியின்கீழ் உலகில் எந்த ஒருமுஸ்லிம்நாடாவதுஇல்லை; சோஷலிசவாதிகளென்று தங்களை அழைத்துக்கொள்ளும்சிலர் முஸ்லிம்களைச் செங்கொடியின்கீழ் வாழவைக்கப் பார்க்கின்றனர்; அல்லாஹவை உண்மையாகப் பின்பற்றும் எந்தமுஸ்லிமாவது மாக்ஸியவாதியாய் இருக்கமுடியாது" என்று வெருவலையில்நிகழ்ந்த கூட்டம் ஒன்றில்பேசிய வெருவலை எம்.பி ஜனாப் பாக்கீர் மாக்கார் கூறியிருக்கின்றார்.

## முதல் சத்திரசிகிச்சை

கொழும்பு அரசினர் பெரியஆஸ்பத்திரியிலே சென்ற3ஆமதிகதியன்று இருதய சத்திரசிகிச்சைஒன்று சித்திகரமாக நடைபெறலாயிற்று. மாவத்தகமையைச்சேர்ந்த 21வயதுள்ள செல்விடிங்கிறி மெனிக்காஎனும் இளம்பெண்ணுக்கே இந்தச்சத்திரசிகிச்சை செய்யப்பட்டது. இதனை நடத்திமுடிக்க ஐந்துமணிநேரம்சென்றது. ஆனால், இப்பெண் நான்குதினங்களின் பின் இறந்துபோயினள். இரண்டாவது இருதய சிகிச்சைபெற்ற திருமதி சபாபதியின் கதியும் அதுவாயிற்று.

## கல்லுண்டாய் உப்பளம்

கல்லுண்டாய் உப்பளத்திலே இம்முறை 30,000அந்தர்உப்பு விளையுமென எதிர்பார்க்கப்படுகிறது. இதுவரை அங்குள்ள உப்பளங்களிலிருந்து 25,000அந்தர்உப்பு சேகரிக்கப்பட்டுள்ளது. சென்றவருடம் இங்குவிளைந்த உப்பு 23,000அந்தராகும். அதாவது இம்முறை 7,000அந்தர்உப்பு கூடுதலாக மதிப்பிடப்பட்டிருக்கிறது.

## மாக்கப்பல் வந்தது

எம். வி.மரியால்என்ற ஆஸ்திரேலிய கப்பல் 10,900தொன்மாவுடன் பருத்தித்துறைவந்துசேர்ந்திருக்கிறது. அதனைக் கரைசேர்க்கும்வேலை சென்ற வியாக்கிழமைமுதல் துரிதமாக நடைபெற்றுவருகிறது.

## புதிய விஷவைத்தியம்

பாம்புக்கடிக்குச் சிகிச்சைசெய்வதிலே கொழும்பு அரசினர் பெரியஆஸ்பத்திரிசைச்சேர்ந்த டக்ர்மார் கண்டுபிடித்துள்ள "இரத்தம்மாற்றும்"புதிய சிகிச்சைக்கென அந்தஆஸ்பத்திரியிலே தனிப்பிரிவுஒன்றும், இரத்தவங்கிஒன்றும் விரைவிலே அமைக்கப்படவிருக்கின்றன. விரியன்பாம்பினால் தீண்டப்பட்ட காமினி திசேராஎன்றவாலிபர் ஒருவர் டக்ர்ஒலிவர்பீரிசைத் தலைமையாகக்கொண்ட டக்ர்மார் குழுஒன்றினால் இப்புதுமுறைகொண்டு வெற்றிகரமாகக் குணமாக்கப்பட்டதைத் தொடர்ந்து சுகாதாரமந்திரி இவ்வைத்தியப்பிரிவையும், இரத்தவங்கியையும் அமைக்க உத்தரவிட்டிருக்கின்றார்.

## தமிழில் பதிய வசதி

இலங்கையிலுள்ள எந்தப்பொலிஸ் நிலையத்திலும் தமிழர்எவரும் தங்கள் தாய்மொழியான தமிழ்மொழியில் முறைப்பாடுகளை — வாக்குமூலங்களைக் கொடுப்பதற்கும், அவைகளைத் தமிழ்மொழியிலேயே பதிவுசெய்வதற்கும் சட்டப்படி உரிமையுண்டென்று கொழும்பிலுள்ள பொலிஸ் தலைமைக் காரியாலயத்தில் தெரிவிக்கப் பட்டிருக்கிறது. அதனால் சகல பொலிஸ்நிலையங்களிலும் தமிழில் வாக்குமூலங்களைப் பதிவுசெய்வதற்கெனத் தமிழ்தெரிந்த ஒருபொலிஸ்[illegible] நடபடிக்கை [illegible]கிறது.

## குருப்பட்டமும் முதற்பூசையும்

திருகோணமலைத் துணைமேற்றிராணியாரான மகாவந். வ தியோகுப்பிள்ளை ஆண்டகைஅவர்கள் சென்ற 5ஆம்திகதி சனிக்கிழமைகாலை குருமார்குழுவுடன் பரிசுத்தகொஞ்சேஞ்சிமாதாவின் ஆசனக்கோவிலிலே குருப்பிரசாதிகள் நாற்பதின்மரும், கன்னியாஸ்திரிமார் அறுபதின்மரும், பாடசாலைப்பிள்ளைகளும், மற்றும்பக்தர்களுமாகப் பெருமதிரளானோர் குழுமியிருந்த சமூகத்திலே வண. பிரான்சீஸ் டானியேல்,O.M.I. பிறதருக்குக் குருப்பட்டமென்னும் திருப்பட்டம் அருளலாயினர். அதிவண. சற். என். குருஸ் சுவாமிகளைத் துணையாகக் கொண்டு ஆண்டகைஅவர்கள் பக்தர்களுக்கெல்லாம் பக்திப்பரவசமூட்டும்வகையிலே நடத்திய அபிஷேகதிருச்சடங்குகளும், அவைகள்பற்றி அருளப்பட்ட தெளிவானவிளக்கங்களும் எவர்க்கும் ஞானமனோகரம் உண்டுபண்ணலாயின.

அபிஷேக திருவைபவம் நிறைவானதும் புதியகுரவர் தமது சகோதரகுருமார் புடைசூழ மேற்றிராணியார்சமேதராய் மேற்றிராசன இல்லம் சேர்ந்தபோது அவரினத்தாரும், அபிமானிகளும் அவரைச்சந்தித்து, அவரின் அபிஷேகிக்கப்பட்ட திருக்கரத்தை முத்தமிட்டு ஆசிபெற்றுநின்றார்கள்.

வண. பிரான்சீஸ் டானியல்சுவாமியார் நமதுஆசனக்கோவில் விசாரணைப் பங்கைச்சேர்ந்த திருமதி சபினா டானியலின் ஏகமைந்தர். சம்பத்திரிசியார் கல்லூரிப் பழையமாணவர். கண்டியிலே அம்பிற்றியாவிலுள்ள தேசியகுருமடத்திலே குருப்பட்டத்திற்கான வேதசாஸ்திரங்கள் கற்றவர். பேசாலைத் திருக்குடும்பக்கன்னிகாமடத்தின் சிரேஷ்டதாயாரும் அங்குள்ள வெற்றிமாதாவின் கலாசாலைத் தலைமையாசிரியையுமான சங். லேயேதாயாரது உடன்பிறந்த சகோதரியின் புதல்வர். இவர் தமது பங்குக்கோவிலான ஆசனக்கோவிலிலே சென்றதிங்கட்கிழமை முதன்முதலாகத் திவ்வியபூசை நிறைவேற்றினார்.

நிற்க, யாழ்ப்பாணத்தைச்சேர்ந்த மற்றோர்தமிழ்மகனான வண. றெஜினோல்ட் ஏபிரகாம், O. M. I. பிறதர் சென்றபுரட்டாசித்திங்கள் 28ஆம்திகதி சனிக்கிழமைமாலை கொழும்பிலே மருதானையிலுள்ள பரிசுத்தபாத்திமாநாயகியின் ஆலயத்திலே பலகுருமாரும், சந்நியாசர், கன்னியாஸ்திரிமாரும், பெருந்திரளானமக்களும் சமூகமாகக் கொழும்பு அதிமேற்றிராசன புதிய துணைமேற்றிராணிமாருள் ஒருவராகிய மகாவந். எற்மன்ட் பெர்னாண்டோ ஆண்டகை அவர்களால் குருத்துவாபிஷேகம் செய்யப்படலாயினர்.

புதியகுரவர் வண.றெஜினோல்ட் ஏபிரகாம்சுவாமியார் சில்லாலைப்பதியைச் சேர்ந்தவர். அப்பதிவாசர்களான சூசைப்பிள்ளை அந்தோனிப்பிள்ளை— விருஸ்பிள்ளை அன்னம்மா தம்பதிகளின் சிரேஷ்டபுதல்வர். மங்களூரிலே அப்போஸ்தலிக்க கார்மேல்சபை மடத்தில் ஒருநவகன்னியாஸ்திரியாய் இருந்துவருகின்ற சங் மரிய சுவற்றாவின் சகோதரர். யாழ்ப்பாணம் புனித ஜோன் பொஸ்கோ பாடசாலையில் ஓர் ஆசிரியையான சங். ஸ்ரனிஸ்லாஸ் மேரிகன்னியாஸ்திரியின் மருகர்.

பம்பலப்பிட்டி சென் பீற்றேர்ஸ் கல்லூரிப் பழையமாணவரான இவரும் அம்பிற்றியாவிலுள்ள தேசியகுருமடத்திலே குருப்பட்டத்திற்கான வேதசாஸ்திரங்கள்கற்றார். இவர் தமது முதற்திவ்வியபூசைப்பலியை வெள்ளவத்தை, புனிதலோறெஞ்சியார்கோவிலில் ஒப்புக்கொடுத்தார். இப்புதிய குரவர்கள்மேல் இறை அருள் பெருகுவதாக.

## வெலியோயாவில் அன்றொருநாள்

புரட்டாசிமாதம் 24-ந்தேதி பகலவன் மறைந்து இருள்கவ்விய இடத்தை நோக்கி நாம் சென்றுகொண்டிருந்தோம். அங்கே நாம்கண்ட காட்சி உள்ளத்தை உருக்கியது... இருநூற்றுக்கு மேற்பட்டமக்கள் ஒளிப்பந்தங்களுடன் எம்மை எதிர்பார்த்துக் கொண்டிருந்தனர். அன்புத்தேவனின் அருள்மொழிகேட்க ஆவல்படும் ஆத்துமங்களுக்கு சிறுஉதவி செய்யவே நாம் சென்றோம்.

7மணியளவில் நாம் விவிலிய வழிபாடொன்றை ஆரம்பித்தோம். எல்லோரும் சுற்றுப்பிரகாரமாக வழிபாடு நடத்த ஒழுங்கு படுத்தப்பட்ட பாடசாலை மண்டபத்தை நோக்கிச் சென்றோம். சுற்றும்பிரகார வேளையில் ஒருவர் வேதாகமத்தை ஒருதலையணைமேல் எடுத்துச்செல்ல இருபக்கங்களிலும் இருவர் மெழுகுதிரி ஏந்திச்சென்றனர். இன்னும்சிலர் தேயிலைக் கொப்புக்களையும், தாம் தொழில்செய்யும் சிறு உபகாரணங்களையும் கொண்டுசென்றனர். பாடசாலை சென்றதும் எல்லோரும் உள்ளேசென்று தமது பொருட்களை ஒரு மேசையில் வைத்தனர். பின்னர் வேதாகமமும், மெழுகுதிரிகளும் ஓர் இடத்தில் இடப்பட்டபின் அவர்களுக்கு அவ்விதம் ஆடம்பரமாக வேதாகமம் கொண்டுவரப்பட்டதின் நோக்கத்தையும் ஏனைய தொழில்உபகரணங்கள் கொண்டுவரப்பட்டதின் நோக்கத்தையும் நாம் விளக்கினோம். அதன்பின்னர் "அழைப்பு" என்ற விஷயம்பற்றிய விவிலிய வழிபாட்டை ஆரம்பித்தோம். ஆதிகாலத்தில் ஆபிரகாம் என்பவர் ஆண்டவரால் அழைக்கப்பட்டார். புதியஏற்பாட்டில் யேசுநாதர் எவ்விதம் அர்ச். இராயப்பரை அழைத்தார். இவர்கள் இருவரும் ஒரு விசேஷ தொழில்செய்ய அழைக்கப்பட்டனர். அதேபோல் இன்று இவ்வேலைத்தொழிலாளர் இத்தேயிலைத் தோட்டத்திலே சேவைசெய்ய அழைக்கப்பட்டுள்ளனர். தொழிலாளரின் மகத்துவத்தையும் ஆண்டவரின் அன்பின்அழைப்பையும் எடுத்துக்காட்டி அம்மக்களை முன்னேற்றும் நோக்கத்துடன் நாம் செய்த இப்புதுமுறை வழிபாட்டின் மூலம் அவர்கள் பயனடைந்தனர். இத்தகைய ஆன்ம ஆசையைத்தீர்க்க முன்வரும் தியாக சேவையாளரின் சேவை அகிலமெங்கும் பரம்பகாம் ஆண்டவரிடம் அன்புடன் கேட்போம்.

எஸ். எம். எம்.

## தண்டமிழ்....

(5-ம்பக்கத் தொடர்ச்சி)

எதற்கும் இளையாத புலமை வளம் பொலிந்து இனிய செந்தமிழ் நடையும் சீரிய செம்பொருள் நலமும் நிறைந்து விளங்கும் தேம்பாவணியென்னும் காப்பியம் ஒன்றே இவருடைய தமிழ்ப் புலமையை நன்கு சித்தரித்துக்காட்டுகிறது. தொன்னூல் விளக்கம், திருக்காவலூர்க் கலம்பகம், திருப்பாவணி, கித்தேரியம்மாள் அம்மானை ஆகியநூல்கள் அடிகளார் தமிழ் அன்னைக்குச் செய்த தொண்டுகளுள் சிலவாகும்.

தமிழுக்கு மறுமலர்ச்சி உண்டாக்கிய வீரமாமுனிவர் இல்லாவிட்டால் தமிழில் வசனநூல்கள், சதுரகராதி கிடையாது. "என்றும் புலவரைப் போற்றுவது தொன்றுதொட்டுத் தமிழர் மரபு." எனவே பிறநாட்டுப் பெரும்புலவராகிய இவருக்கு நன்றிக்கடன் கொடுப்பது தமிழராகிய எமது கடமையாகும். ஆண்டுதோறும் இவருக்கும், இவர்போன்ற தமிழ்ப்பெரும் புலவர்களுக்கும் விழா எடுப்போம். தமிழைவளர்ப்போம்.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம், 20இலக்க 5ஆம் குறுக்குத்தெருவில் வசிக்கும் திரு. சீக்கிலஸ் ஜேம்ஸ் அவர்களால் உரிமையாளருக்காக அர்ச். சூசைமாமுனிவர் அச்சகத்தில் 1968ஆம் ௵ ஐப்பசி௴ 12-ந்தேதி சனிக்கிழமை அச்சிடப்பெற்று வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org